Journal of Valartamil
UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS
SULTAN IDRIS EDUCATION UNIVERSITY
eISSN 2821-3157

# சிறப்புத் தேவையுடைய தொடக்கப்பள்ளி மாணவர்களுக்குத் தமிழ் மொழியைக் கற்பிப்பதற்கான பரிந்துரைகள்

## *Recommendations for Teaching Tamil to Primary School Students with Special Educational Needs*

**M. Sagiitha, Harini Jayawardeen***

National Institute of Education, Singapore

***Corresponding author email: nie24.ms9253@e.ntu.edu.sg**

**ARTICLE HISTORY**
Received: 24th April 2026
Revised: 22nd May 2026
Accepted: 15th June 2026
Published: 20th June 2026

**KEYWORDS**
சிறப்புத் தேவையுடைய மாணவர்கள்
தமிழ் மொழிக் கற்பித்தல்
ஆட்டிசம்
கவனக்குறை மிகைச்சுறுதி குறைபாடு
டிஸ்லெக்சியா
உள்ளடங்கிய கல்வி

**ஆய்வுச் சுருக்கம் -** சிங்கப்பூர்க் கல்விச் சூழலில் உள்ளடங்கிய கல்விமுறை வலுப்பெற்று வரும் நிலையில், அரசாங்கப் பள்ளிகளில் பயிலும் சிறப்புத் தேவையுடைய மாணவர்களின் எண்ணிக்கை அண்மைய காலங்களில் அதிகரித்து வருகிறது. 2026 நிலவரப்படி, அரசாங்கப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களில் சுமார் 7% சிறப்புத் தேவையுடையவர்கள் என்று புள்ளிவிவரங்கள் சுட்டுகின்றன (Ministry of Education, 2026). குறிப்பாக, ஆட்டிசம் (Autism), கவனக்குறை மிகைச்சுறுதி குறைபாடு (ADHD) மற்றும் டிஸ்லெக்சியா (Dyslexia) ஆகிய நரம்பியல் சார் வளர்ச்சி மாற்றங்களைக் கொண்ட மாணவர்கள், இரண்டாம் மொழியான தமிழைக் கற்பதில் எதிர்கொள்ளும் பன்முகக் கற்றல் தடைகளை இக்கட்டுரை பகுப்பாய்வு செய்கிறது. இம்மாணவர்கள் தேசியப் பாடத்திட்டத்தின் கீழ் பொதுத்தேர்வுகளை மேற்கொள்ள வேண்டிய அவசியத்தில் இருப்பதால், அவர்கள் கற்கும் ஆற்றலுக்கும் பாடத்திட்டத்தின் எதிர்பார்ப்புக்கும் இடையிலான இடைவெளியைக் குறைப்பது இன்றியமையாதது. காண் கல்விக் கருவிகள், பல்லூடகத் தொழில்நுட்பக் கருவிகள் மற்றும் செயல்பாட்டு வழிக் கற்றல் ஆகியவற்றை ஒருங்கிணைத்து, மொழிக்கூறுகளை எளிய படிநிலைகளாகப் பகுத்து வழங்குவதன் மூலம் சிறப்புத் தேவையுடைய மாணவர்களின் கற்றல் இடைவெளிகளைக் குறைக்கலாம் என்று இக்கட்டுரை வலியுறுத்துகிறது.

**ABSTRACT -** As inclusive education continues to gain momentum in Singapore's educational landscape, the number of students with Special Educational Needs (SEN) enrolled in mainstream schools has been increasing in recent years. Statistics indicate that approximately

https://doi.org/10.37134/jvt.vol7.1.7.2026
© 2026 Jayawardeen. Published by Pejabat Karang Mengarang (UPSI Press).
This is an open access article under the CC BY-NC 4.0 license

7% of students in government schools have special educational needs as of 2026 (Ministry of Education, 2026). This article analyses the multifaceted learning barriers encountered by students with neurodevelopmental differences — specifically Autism, Attention Deficit Hyperactivity Disorder (ADHD), and Dyslexia — in learning Tamil as a second language. Given that these students are required to sit national examinations under the standard curriculum, addressing the gap between their learning capacities and curricular expectations is essential. This article argues that by integrating visual learning tools, multimedia technology, and activity-based learning, and by breaking down language components into manageable sequential steps, the learning gaps of students with special educational needs can be meaningfully reduced.

***KEYWORDS:*** *Special Educational Needs (SEN), Tamil language teaching, Autism, ADHD, Dyslexia, Inclusive education*

## முன்னுரை

சிங்கப்பூர்த் தொடக்கப்பள்ளிகளில் சிறப்புத் தேவையுள்ள மாணவர்களின் எண்ணிக்கை கடந்த சில ஆண்டுகளாக அதிகரித்து வருகிறது. 2026 நிலவரப்படி, அரசாங்கப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களில் சுமார் 7% சிறப்புத் தேவையுடைய மாணவர்கள் என்று புள்ளிவிவரங்கள் சுட்டுகின்றன (Ministry of Education, 2026). ஆட்டிசம், கவனக்குறை மிகைச்சுறுதி குறைபாடு மற்றும் டிஸ்லெக்சியா ஆகிய சிறப்புத் தேவைகளே தொடக்கப்பள்ளி மாணவர்களிடத்தில் பரவலாகக் காணப்படுகின்றன (Ministry of Education, 2024).

சிங்கப்பூர்க் கல்வி அமைச்சு, சிறப்புக் கல்வி அதிகாரிகளின் (SEN Officers) எண்ணிக்கையை அதிகரிக்கும் முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது (Ministry of Education, 2026). இம்மாணவர்களுக்குத் தேவைப்படும் மனநல ஆதரவை பள்ளியில் சிறப்புக் கல்வி அதிகாரிகள் வழங்குவர். எனினும், இவர்களின் கற்றலுக்கு ஏற்ற வகுப்பறை சூழலை உருவாக்குவது, கற்றலைத் திட்டமிடுவது போன்ற பணிகளை மேற்கொள்வது ஆசிரியர்களின் பொறுப்பில் உள்ளது.

இக்கட்டுரையில் தொடக்கப்பள்ளி தமிழ்மொழி ஆசிரியர்கள், ஆட்டிசம், கவனக்குறை மிகைச்சுறுதி குறைபாடு மற்றும் டிஸ்லெக்சியா ஆகிய கற்றல் குறைபாடுகள் உள்ள மாணவர்களுக்கு ஏற்ற கற்பித்தலை மேற்கொள்வதற்கான சில பரிந்துரைகளை முன்வைக்கிறோம்.

## ஆட்டிசம்

2025-ஆம் ஆண்டின்படி, சிங்கப்பூரில் 100 முதல் 150 குழந்தைகளில் ஒருவருக்கு ஆட்டிசம் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது (NUHS, 2025). இது ஒரு நபரின் சமூகத் தொடர்பு மற்றும் தகவல் பரிமாற்றத் திறன்களைப் பாதிக்கும் நரம்பியல் வளர்ச்சிக் குறைபாடாகும். ஆட்டிசம் ஒரு பரந்த வளர்ச்சி நிலையில் (Spectrum) உள்ளதால் ஒவ்வொரு மாணவரும் வெவ்வேறு சவால்களைக் கொண்டிருப்பர். இம்மாணவர்களுக்குச் செவிவழித் தகவல்களைவிட (Auditory Processing) நிலையான காட்சிவழித் தகவல்களை (Visual Learning) உள்வாங்குவது எளிது. ஒலிகள் காற்றில் மறைந்துவிடும்; ஆனால் படங்கள், அட்டவணைகள் போன்ற காட்சிகள் உறுதியான வழிகாட்டியாக அமைந்து கற்றலில் ஏற்படும் மனப்பதற்றத்தைக் குறைக்கின்றன.

https://doi.org/10.37134/jvt.vol7.1.7.2026
© 2026 Jayawardeen. Published by Pejabat Karang Mengarang (UPSI Press).
This is an open access article under the CC BY-NC 4.0 license

## 2.1 கற்றல் சவால்களும் தீர்வுகளும்

**அட்டவணை 1.** ஆட்டிசம் மாணவர்களுக்கான கற்றல் சவால்களும் தீர்வுகளும்

| கற்றல் சவால்கள் | விளக்கம் | தீர்வுகள் |
|---|---|---|
| சமூகத் தொடர்பு & மொழித்திறன் | மற்றவர்களுடன் உரையாடுதல், கண் தொடர்பு கொள்வதில் சிரமம். உவமைகளைப் புரிந்துகொள்வதில் சிக்கல். | படப் பரிமாற்ற முறை (PECS): தேவைகளைப் பட அட்டைகள் மூலம் வெளிப்படுத்தப் பயிற்சி அளித்தல் — வாய்மொழித் திறனைத் தூண்டும். |
| எழுத்து வடிவப் புரிதல் | 2D தமிழ் எழுத்துகள் பொருளற்ற கோடுகளாகவோ சிக்கலான சித்திரங்களாகவோ தோற்றமளிக்கும். | முப்பரிமாண (3D) கற்றல்: களிமண் பயன்படுத்தி எழுத்துகளை உருவாக்குதல். தொடுதல் மூலம் கற்கும்போது மூளையில் உறுதியான படிமம் உருவாகிறது. |

## 2.2 ஆட்டிசம் உடைய மாணவர்களுக்கான தமிழ் கற்றல் பரிந்துரைகள்

### படப் பரிமாற்றத் தகவல் தொடர்பு முறை (PECS)

மொழியைக் குறியீடாகப் புரிவதைவிட காட்சிப் பொருளாக இவர்கள் எளிதில் உள்வாங்குவர். உதாரணமாக, தாகம் எடுக்கும்போது 'எனக்குத் தண்ணீர் வேண்டும்' என வாய்மொழியாகக் கேட்பதற்குப் பதிலாக, தண்ணீர் புட்டியின் புகைப்பட அட்டையை ஆசிரியரிடம் காட்டும் முறையைப் பழக்கலாம்.

### காட்சி அட்டவணை

எதிர்பாராத மாற்றங்களால் ஏற்படும் பதற்றத்தைத் தவிர்க்கச் செயல்பாடுகளை வரிசைப்படுத்தலாம்.

*(எ-கா): வணக்கம் கூறுதல் → பாடல் கேட்டல் → எழுத்துப்பயிற்சி → விடைபெறுதல்*

இது பாதுகாப்பான சூழலை உருவாக்குவதோடு 'முதலில்', 'அடுத்து' போன்ற காலவரிசைச் சொற்களைக் கற்கவும் உதவுகிறது.

### மாற்றியமைக்கப்பட்ட சைகை மொழி

பேச்சுத் திறன் சவால் கொண்டவர்களுக்கு சொற்களுடன் சைகைகளை இணைத்துக் கற்பிக்கலாம்:

*கைகூப்புதல் → வணக்கம்*
*கைகளைத் தன்னை நோக்கி இழுத்தல் → வேண்டும்*
*கைகளைத் தட்டுதல் → முடிந்தது*

காட்சியும் இயக்க உணர்வும் இணைவதால் இது சிறந்த மாற்றுத் தகவல் தொடர்பு பாலமாக அமைகிறது. இவ்வழிமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் ஆட்டிசம் உடைய மாணவர்களின் தனித்துவத் தேவைகளை உணர்ந்து பாதுகாப்பான கற்றல் சூழலை ஆசிரியர்களால் உருவாக்க முடியும்.

https://doi.org/10.37134/jvt.vol7.1.7.2026
© 2026 Jayawardeen. Published by Pejabat Karang Mengarang (UPSI Press).
This is an open access article under the CC BY-NC 4.0 license

**கவனக்குறை மிகைச்சுறுதி குறைபாடு (ADHD)**

நரம்பு மண்டல வளர்ச்சி மாறுபாடுகள் மற்றும் மரபியல் காரணங்களால் கவனக்குறை மிகைச்சுறுதி குறைபாடு உண்டாகிறது. இது பெண் பிள்ளைகளைவிட ஆண் பிள்ளைகளிடம் பரவலாகக் காணப்படுகிறது (Wright, Cohen, & Poon, 2008). மருத்துவர்கள் இதை மூன்று வகையாகப் பிரிக்கின்றனர்:

கவனக் குறைபாடு (Attention Deficit): தொடர்ந்து கவனம் செலுத்துவதில் சிரமம்.
மிகை இயக்கம் (Hyperactivity): ஒரே இடத்தில் அமைதியாக இருக்க முடியாமை மற்றும் தொடர்ந்து பேசுதல்.

சிந்தித்துச் செயல்படாமை (Impulsive Behaviour): பிறர் பேசும்போது இடைமறித்தல் மற்றும் எளிதில் கவனச்சிதறலுக்கு உள்ளாகுதல் (நதியா, 2024).
இதனால் கற்றல் இவர்களுக்குச் சுமையாக மாறுகிறது. எனினும் ஆசிரியரின் தகுந்த அணுகுமுறையாலும் ஆதரவாலும் இவர்கள் சிறப்பாகக் கற்க முடியும் (Wright, Cohen, & Poon, 2008).

### 3.1 கற்றல் சவால்களும் தீர்வுகளும்

**அட்டவணை 2.** கவனக்குறை மிகைச்சுறுதி குறைபாடு மாணவர்களுக்கான கற்றல் சவால்களும் தீர்வுகளும்

| கற்றல் சவால்கள் | தீர்வுகள் |
|---|---|
| வாய்மொழி விளக்கங்களைப் பின்பற்றுதல். | படங்கள், வரைபடங்கள் போன்ற காட்சிவழி விளக்கங்களை அளித்தல். |
| கவனச்சிதறல். | அமைதியான சூழலை உருவாக்குதல்; பாடங்களுக்கு இடையே சிறு இடைவேளைகளை அளித்தல். |
| பயிற்சிகளை முடித்தல். | சிறு பகுதிகளாகப் பிரித்தல்: 20 கேள்விகளை ஒரே நேரத்தில் தராமல், 5 கேள்விகள் வீதம் பிரித்து வழங்குதல். |
| பாடத்தைச் செய்வதில் குழப்பம். | சரிபார்ப்புப் பட்டியல் (Checklist): நடவடிக்கைகளைப் பட்டியலிட்டு வழங்குதல்; பணிகளை முடித்தவுடன் பாராட்டி ஊக்கப்படுத்துதல். |

### 3.2 கவனக்குறை மிகைச்சுறுதி குறைபாடு உடைய மாணவர்களுக்கான தமிழ் கற்றல் பரிந்துரைகள்

#### வண்ணக் குறியீட்டு முறை

வாசிக்கும்போது குறில்-நெடில் வேறுபாட்டினை உணர்த்த குறிலுக்கும் நெடிலுக்கும் வெவ்வேறு வண்ணங்களைப் பயன்படுத்தலாம். இதனால் மாணவர்களின் கவனம் சிதறாமல் வாசிப்புத் திறன் மேம்படும். இம்முறையை வாக்கியம் அமைத்தல், ஒருமை-பன்மை, மூவிடப்பெயர்கள் போன்ற பிற இலக்கணக் கூறுகளுக்கும் பயன்படுத்தலாம்.

#### சிறு பகுதிகளாகப் பிரித்துக் கொடுத்தல் (Chunking Method)

கருத்தறிதல் போன்ற நீண்ட பாடப்பகுதிகளை ஒரே நேரத்தில் காண்பிப்பது மலைப்பை ஏற்படுத்தும். அவற்றைச் சிறு சிறு பகுதிகளாகப் பிரித்துக் கற்பிப்பது மாணவர்களின் கவனச்சிதறலைக் குறைத்து முக்கியக் கருத்துகளை எளிதில் உள்வாங்க உதவும்.

https://doi.org/10.37134/jvt.vol7.1.7.2026
© 2026 Jayawardeen. Published by Pejabat Karang Mengarang (UPSI Press).
This is an open access article under the CC BY-NC 4.0 license

### உடல் அசைவுகள் (Kinesthetic Learning)

திருக்குறள், செய்யுள் போன்றவற்றை வெறும் வார்த்தைகளாகக் கற்பிக்காமல் சைகைகள் (Gestures) மற்றும் நடிப்பு (Roleplay) மூலம் கற்பிக்கலாம். மாணவர்கள் அசைந்து கற்கும்போது கவனச்சிதறல் குறைவதாக ஆய்வுகள் கூறுகின்றன (Jensen, 2005). ஒரு குறளைக் கற்பிக்கும்போது அதற்கேற்பக் குதித்தல், கைதட்டுதல் போன்ற செயல்களைச் செய்வது மாணவர்களின் மூளையைச் சுறுசுறுப்பாக்கும். இதனால் மாணவர்கள் சலிப்பின்றி ஆர்வமாகக் கற்பதோடு எளிதில் மனப்பாடம் செய்யவும் இது துணைபுரியும் (Gardner, 1983).

## டிஸ்லெக்சியா

டிஸ்லெக்சியா என்பது மூளையில் மொழியியல் தரவுகளைச் செயலாக்கும் முறையில் ஏற்படும் நரம்பியல் குறைபாடாகும் (Specific Learning Disorder). இது மாணவரின் பொதுவான அறிவுத்திறனைப் பாதிப்பதில்லை; டிஸ்லெக்சியா உள்ள பெரும்பாலான மாணவர்கள் சராசரிக்கும் மேலான நுண்ணறிவைக் கொண்டிருப்பர் (Shaywitz, 2020).

சிங்கப்பூரின் இருமொழித் திட்டத்தில், ஒலியியல் கூறுகளையும் வரிவடிவங்களையும் ஒருங்கிணைப்பதில் (Grapheme-Phoneme Mapping) இவர்கள் பெரும் சவால்களை எதிர்கொள்கின்றனர் (Quah, 2026). இது தமிழ் போன்ற ஒலியியல் செறிவுமிக்க மொழிகளில் அவர்களின் வாசிப்பு வேகம் மற்றும் புரிந்துகொள்ளும் ஆற்றலை வெகுவாகப் பாதிக்கிறது.

### 4.1 தமிழ் மொழிக் கற்றலில் எதிர்கொள்ளும் சவால்கள்

### வரிவடிவ நிலைமாற்றம் (Visual Transposition)

நுட்பமான வளைவுகள் மற்றும் சுழிகளைக் கொண்ட எழுத்துகளைப் பிரித்தறிவதில் (Visual Discrimination) சிரமம் ஏற்படும்.

> *(எ-கா): அடிப்படை வடிவம் ஒன்றான 'ப-வ-ம' போன்ற எழுத்துகள் மற்றும் சுழிகளின் எண்ணிக்கையில் மாறுபடும் 'ண-ன-ல' போன்ற எழுத்துகளை அடையாளம் காண்பதில் குழப்பம் ஏற்படும்.*

### நேர்க்கோடற்ற கட்டமைப்பு

ஆங்கிலம் போல் நேர்க்கோட்டில் அமையாமல் தமிழ் உயிர்மெய் எழுத்துகளில் குறியீடுகள் முன்னும் பின்னும் இருபுறமும் அமைவதை (எ-கா: கெ, கா, கொ) தொடர்ச்சியாகப் படிப்பதில் (Decoding) சிக்கல் ஏற்படுகிறது.

### ஒலியியல்-உச்சரிப்பு வேறுபாடுகள்

தமிழின் தனித்துவமான 'ல-ள-ழ' மற்றும் 'ன-ண-ந' ஆகிய ஒலிகளைக் காதுகளால் உள்வாங்கி அவற்றைச் சரியான வரிவடிவத்துடன் இணைப்பதில் (Grapheme-Phoneme Mapping) சிரமம் ஏற்படும்.

https://doi.org/10.37134/jvt.vol7.1.7.2026
© 2026 Jayawardeen. Published by Pejabat Karang Mengarang (UPSI Press).
This is an open access article under the CC BY-NC 4.0 license

### 4.2 டிஸ்லெக்சியா மாணவர்களுக்கான தமிழ் கற்றல் பரிந்துரைகள்

**காட்சிசார் ஒருமுகப்படுத்துதல்**

வாசிக்கும்போது 'வரி தாண்டுதல்' மற்றும் 'எழுத்து குழப்பத்தை'த் தவிர்க்க ஒரு வரியை மட்டும் காட்டும் வாசிப்புப் பட்டைகளை (Reading Strips) பயன்படுத்துவது காட்சிச் சிதறலைக் குறைக்கும்.

**எழுத்துக் குடும்பங்கள் மற்றும் நினைவூட்டிகள் (Mnemonics)**

247 எழுத்துகளையும் ஒரே நேரத்தில் மனப்பாடம் செய்ய வைக்காமல் வடிவ ஒற்றுமை அடிப்படையில் பிரித்துக் கற்பித்தல் சிறந்தது.

*(எ-கா): ப-வ-ம தொகுதி; ர-ட-ப தொகுதி என வடிவ ஒற்றுமையின் அடிப்படையில் பிரித்தல்.*

எழுத்து வடிவங்களை நிலைநிறுத்த மணல் அல்லது பருத்தியால் ஆன தொடு உணர்வுப் பலகைகள் (Tactile Boards) மற்றும் கடினமான எழுத்துகளுக்கு எளிய கதைகளை நினைவூட்டிகளாகப் பயன்படுத்தலாம்.

**தொழில்நுட்பக் கருவிகளின் பயன்பாடு**

கடினமான சொற்களை வருடி ஒலியாக மாற்றும் 'பேனா வாசிப்பான்' (Pen Reader) மற்றும் எழுதச் சிரமப்படும் மாணவர்களுக்குப் பேச்சு-எழுத்து செயலி (Speech-to-Text) ஆகியவற்றைப் பயன்படுத்த ஊக்குவிப்பது அவர்களின் கற்றல் வேகத்தையும் தன்னம்பிக்கையையும் வளர்க்கும்.

## முடிவுரை

சிறப்புத் தேவை மாணவர்களுக்குச் சிறந்த கல்வி அனுபவத்தை வழங்க புதுமையும் பழமையும் இணைத்த புத்தாக்க அணுகுமுறையுடன் ஆசிரியர்கள் கற்பிக்க வேண்டும். பொறுமையுடனும் அன்போடும் நாம் பயிற்றுவிக்கும் ஒவ்வொரு சொல்லும் அவர்களது தன்னம்பிக்கையை உயர்த்தி சமூகத்தோடு ஒன்றிணையப் பெரும் பாலமாக அமைகிறது. நவீனக் கற்பித்தல் முறைகளைக் கையாண்டு அவர்களின் தனித்துவமான திறன்களை அங்கீகரிப்பதன் மூலம் ஒரு வளமான எதிர்காலத்தை நாம் உருவாக்கலாம். இந்த அர்ப்பணிப்புள்ள பயணம் மாணவர்களின் வாழ்வில் ஒளியேற்றி தமிழின் சிறப்பை உலகறியச் செய்யும் உன்னதப் பணியாகும்.

## REFERENCES

Gardner, H. (1983). Frames of mind: The theory of multiple intelligences. New York: Basic Books.
Jensen, E. (2005). Teaching with the brain in mind (2nd ed.). Alexandria, VA: ASCD.
Ministry of Education Singapore. (2024). Statistics of students with reported special education needs in mainstream schools. Singapore: MOE.
Ministry of Education Singapore. (2026). Proportion of SEN students in mainstream schools and ensuring adequate training for teachers. Singapore: MOE.
National University Health System (NUHS). (2025). Autism (children) — What it is, signs/symptoms, diagnosis, treatment. https://www.nuhs.edu.sg/patient-care/find-a-condition/autism-children
Quah, M. M. (2026). Educating learners with diverse abilities. Singapore: National Institute of Education. (Original work published 2004).
Shaywitz, S. E. (2020). Overcoming dyslexia: A new and complete science-based program for reading problems at any level. New York: Alfred A. Knopf.

https://doi.org/10.37134/jvt.vol7.1.7.2026
© 2026 Jayawardeen. Published by Pejabat Karang Mengarang (UPSI Press).
This is an open access article under the CC BY-NC 4.0 license

Wright, S., Cohen, L., & Poon, K. (2008). Special education perspectives and practices. Singapore: Pearson.

நதியா, ரா. (2024, May 29). ஏடிஹெச்டி என்றால் என்ன? — ஒரு தெளிவுப் பார்வை. இந்து தமிழ் திசை. https://www.hindutamil.in/news/supplements/nalam-vazha/1256332-what-is-adhd.html

https://doi.org/10.37134/jvt.vol7.1.7.2026
© 2026 Jayawardeen. Published by Pejabat Karang Mengarang (UPSI Press).
This is an open access article under the CC BY-NC 4.0 license